விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 054 வள்ளுவர் ஆண்டு 2054 தை 28 சனிக்கிழமை (11.02.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/= மட்டுமே

## 3 மாதங்களுக்குள் யாழில் போதை ஒழிப்பு



### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

- மன்னார், காங்கேசன்துறையூடாக விரைவில் இந்தியா வுக்கு கப்பல் சேவை.
- யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் துரித அபிவிருத்தி.
- இயற்கை காற்று, சூரியசக்தியை பயன்படுத்தி வடக்கில் மின்சார உற்பத்தி.

(02ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறை துறைமுகத்தை

### பார்வையிட்ட இந்தியக் குழு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கான விஜயத்தை 11

## காணி, பொலிஸ் அதிகாரங்களை

### மாகாணங்களுக்கு வழங்க விடமாட்டோம்



அத்துரலிய ரத்ன தேரர்

03ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.கலாசார மத்திய நிலையம் இன்று கையளிப்பு

### இந்திய மத்திய அமைச்சர், ஜனாதிபதி, பிரதமர் பங்கேற்பு

(யாழ்ப்பாணம்)

கலாசார, பாரம்பரியங்களின் மேம்பாட்டுக்காக, இந்திய அரசாங்கத்தின் நிதி நன்கொடையின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தை கைய ளிக்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9 11

## திட்டமிட்டவாறு தேர்தலை நடத்துக

### தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உயர் நீதிமன்றம் அனுமதி

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை திட்டமிட்டவாறு நடாத்துமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உயர்நீதிமன்றம் அனுமதியை வழங்கியுள்ளது.




(11ஆம் பக்கம் பார்க்க)

### யாழில் சுதந்திர தின விழாவுக்கு எதிராக

## போராட்டம் நடத்த நீதிமன்றம் தடையுத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரில் இன்று நடைபெறும் சுதந்திர தின விழாவுக்கு எதிர்ப்புத் தெரி வித்து நடத்த ஏற்பாடு செய்யப் பட்டுள்ள போராட்டத்துக்கு நீதிமன்றம் தடைக் கட்டளை வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணம் தலைமையகபொலிஸ் 11

### யாழ்.விஜயம் மேற்கொண்டுள்ள இந்தியக் குழு

## தமிழ் மக்களின் பிரச்சினைகளை பாரதப் பிரதமருக்கு தெரிவிக்க வேண்டும்

### செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் விஜயம் மேற் கொண்டுள்ள இந்திய உயர்மட் டக்குழுவினர் தீர்க்கப்படாத தமி ழர்களின் பிரச்சினைகளை இந் தியப் பிரதமருக்கு தெளிவுபடுத்த வேண்டும் என செஞ் சொற்செல்வர் ஆறு. 11

### யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ள

## சுதந்திர தின நிகழ்வுக்கு எதிராகப் போராட அழைப்பு

(யாழ்ப்பாணம்)



தமிழ் மக்களினுடைய பிரச் சினைகளுக்கு இதுவரை கால மும் தீர்வு வழங்கப்படாத நிலை யில் பொருளாதாரம்பின்ன டைந்துள்ள நிலையில் 11

### தமிழர்களின் சொந்தக் காணிகளை

## தமிழரிடமே கையளிக்க எதற்கு விவாதம் - ஜே.வி.பி

(கொழும்பு)

தமிழ் மக்களின் காணி களை அரச நிறுவனங்களோ அல்லது இராணுவத்தினரோ கையகப்படுத்தியிருந்தால் அதனை உடனடியாக விடு விக்கவேண்டிய பொறுப்பு அர சாங்கத்திற்கு உள்ளதாகவும் இதனை எதற்காக விவாதப்பொருளாக 02

## யாழ்.கலாசார மத்திய நிலையம் யாழ்.மக்களுக்கே உரியது

### கம்பன் விழாவில் அண்ணாமலை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையம் யாழ்ப்பாண மக்களுக்கே வழங்கப்படும் என பாரதிய ஜன தாக் கட்சியின் தமிழகத் தலைவர் அண்ணாமலை தெரிவித்துள் ளார்.

அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்தும் யாழ்ப் பாணக் கம்பன் விழா 11

நடுவு நிலை தவறாது நின்று தாக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியின் சகல முடிவுகளுக்கும் ஆதரவு வழங்க முடியாது

## பொதுஜன பெரமுன

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சகல தீர்மானங்களுக்கும் எம்மால் ஆதரவளிக்க முடியாது. நல்லாட்சி அரசாங்கத்தில் கூட அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தினை முழுமையாக் நடைமுறைப்படுத்துவதற்கு முயற்சிக்கப்படாத நிலையில், தற்போது அதற்கு முக்கியத்துவமளிப்பதற்கான காரணி தொடர்பில் ஆராய வேண்டும்என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

மேலும் பொதுஜன பெரமுன அதிகாரப் பகிர்வை எதிர்க்கும் கட்சியல்ல. ஆனால் அதிகாரப் பகிர்வு இன, மத, மொழி ரீதியில் வழங்கப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பொதுஜன பெரமுன அதிகாரப் பகிர்வை எதிர்க்கும் கட்சியல்ல. ஆனால் அதிகாரப் பகிர்வானது இன ரீதியாகவோ, மொழி ரீதியாகவோ அல்லது மத ரீதியாகவோ வழங்கப்படுவதை நாம் எதிர்க்கின்றோம். அதிகாரம் பகிரப்பட வேண்டியது மக்களுக்காகும்.

13ஆவது அரசியலமைப்பு திருத்தம் 35 ஆண்டுகளாக எமது அரசியலமைப்பில் காணப்படுகிறது. இக்காலப்பகுதியில் ஆட்சி செய்த 7 ஜனாதிபதிகளில் எவருமே 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று எண்ணவில்லை. நல்லாட்சி அரசாங்கத்தில் கூட இவ்வாறானதொரு முயற்சி முன்னெடுக்கப்படவில்லை.

எனவே கடந்த காலங்களில் ஏன் இதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது தொடர்பில் ஆராய வேண்டும். எம்மால் உடன்படக் கூடிய விடயங்களில் மாத்திரமே நாம் ஜனாதிபதிக்கு ஆதரவளிப்போம்.

ஜனநாயகம், இறையாண்மையைப் பாதுகாத்தல் மற்றும் வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை மேம்படுத்தல் என்பவற்றுடன் தொடர்புடைய செயற்பாடுகளுக்கே நாம் பிரதானமாக எமது ஒத்துழைப்பினை வழங்குவதற்கு இணங்கியுள்ளோம். எனவே ஆரம்பத்திலேயே இணக்கப்பாடு எட்டப்பட்ட விடயங்களைத் தவிர, ஜனாதிபதி கூறும் அனைத்து விடயங்களுக்கும் எம்மால் ஆதரவளிக்க முடியாது என்றார். (ம-7)


## பணிப்பெண் தேவை

மானிப்பாய் நவாலியில் வீட்டு வேலைகள் செய்வதற்கு 35-45 வயதிற்கு இடைப்பட்ட நேர்மையான, வீட்டில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு : 077 788 8325 (14571)


## தமிழரிடமே...

மாற்றி ரணில் விக்கிரமசிங்க அதனை தனது கொள்கை பிரகடன உரையில் குறிப்பிடுகின்றார் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

9ஆவது பாராளுமன்றத்தை ஜனாதிபதி தனது கொள்கை விளக்க உரையுடன் ஆரம்பித்து வைத்ததையடுத்து நேற்று இரண்டாவது நாளாக இடம் பெற்ற விவாதத்தின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (ம-7)

## யாழ். அத்தியடி வீரகத்தி பிள்ளையார் ஆலய பொதுக் கூட்டம் நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ விரகத்தி பிள்ளையார் ஆலய பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக தெரிவும் நாளை (ஞாயிற்றுக்கிழமை) மாலை 4.00 மணியளவில் கணபதி கலாசார மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இதில் உபயகாரர்கள், அடியவர்கள் யாவரையும் கலந்து கொள்ளுமாறு ஆலய நிர்வாக சபையால் கோரப்பட்டுள்ளது. (ம-7)

## 3 மாதங்களுக்குள்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுமாலை விசேட விமானத்தின் ஊடாக யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தினை வந்தடைந்தார்.

தொடர்ந்து யாழில் உள்ள பல்வேறு தரப்பினருடன் ஜனாதிபதி கலந்துரையாடல்களில் ஈடுபட்டார் வடக்கின் அபிவிருத்தி தொடர்பில் ஆராய்ந்த ஜனாதிபதி தற்போது மாகாணத்தின் கல்வி மேம்பாட்டுக்கு பெருந்தடையாக இருக்கும் போதைப் பொருள்பாவனையினை மூன்று மாதங்களுக்குள் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தார்.

மேலும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் விசேட செயற்றிட்டங்களினை அமுல்படுத்துவதுடன் பூநகரியில் ஓர் நகரம் அமையப்பெறல் மன்னார் காங்கேசன் துறையினூடாக இந்தியாவுக்கான கப்பல் சேவை வடபகுதியில் காணப்படும் இயற்கை காற்று மற்றும் சூரியசக்தி என்பவற்றினை பயன்படுத்தி மின்சார உற்பத்தி போன்றன தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன் இவற்றினை செயற்படுத்த வெளிநாட்டு ஒத்துழைப்புக்களுடான 10 ஆண்டு கால செயற்றிட்டம் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

இக் கலந்துரையாடலில் கலந்து கொண்ட பிரதேச விவசாயிகளின் கோரிக்கைகளினை செவி மடுத்த ஜனாதிபதி நெல்லுக்கான கட்டுப்பாட்டு விலை அமுலாக்கம், நியாய விலைக்கு கொள்வனவு செய்தல் தொடர்பில் நெல் சந்தைப் படுத்தல் சபையுடன் ஆலோசித்து தீர்வு காண்பதாகவும் உறுதியளித்தார்.

மேலும் தன்னிறைவு பொருளாதாரம் விவசாயத்திற்குத் தேவையான மின் சாரத்தினை பெற்றுத்தர உள்நாட்டு உற்பத்திகளை ஊக்கப்படுத்தல் விவசாயத்தினை நவீனப்படுத்தல் மீன்பிடிக்குத் தேவையான மண்ணெண்ணயினை நியாயவிலையில் பெற்றுத் தருவதில் காணப்படும் சிக்கல்கள் அவற்றுக்கான தீர்வுத்திட்டங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இக் கலந்துரையாடலில் மீன்பிடி கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, வடக்குமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துல சேன, விஜயகலா மகேஸ்வரன், யாழ்மாவட்ட அரச அதிபர், பிரதேச செயலாளர்கள், புத்திஜீவிகள், சமூக ஆர்வளர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (ம-7)

## மரண அறிவித்தல்

### அப்பாக்குட்டி இளையதம்பி

(உத்தரவுபெற்ற நில அளவையாளர்)

தோற்றம் 04 . 05 . 1942



மறைவு 08 . 02 . 2023

மீசாலையைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் பொற்பதி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாக்குட்டி இளையதம்பி அவர்கள் கடந்த 08.02.2023 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பாக்குட்டி - பொன்னி தம்பதியினரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற கந்தையா - சீதாலட்சுமி தம்பதியினரின் அன்பு மருமகனும், சுசிலாதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கணபதி, சின்னாச்சி, நாகமுத்து, முருகேசு, கந்தையா, தங்கமுத்து மற்றும் செல்லத்துரை, தெய்வானை, தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், ராஜேந்திரராவ், வத்சலா (ஜேர்மனி), கௌசலா ஆகியோரின் அன்பு மைத்துனரும், சூரியா (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், மாகாண காணி ஆணையாளர் திணைக்களம் வடமாகாணம்), முகுந்தன் (லண்டன்), விஜிதன் (முன்னாள் விரிவுரையாளர் - தேசிய தொழிற்பயிற்சி அதிகார சபை), இந்துஜா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிறிதரன் (ஆசிரியர் - கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்), யசோதரை (லண்டன்), ஜீவகலா (U.S.A), மோகனதாஸ் (பொறியியலாளர் - லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், இளவேனி, வர்கேஸ், நிகேஸ், தேயஸ்வி, யஸ்வின், அஸ்வின் ஆகியோரின் அன்புக்குரிய பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இல.29/13, உடையார் ஒழுங்கை, கொக்குவிலில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நாளை (12.02.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் காலை 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் - குடும்பத்தினர்

தொலைபேசி இல. :- 076 923 2266, 077 222 3711, 077 471 3637 (14570)


## மணிவிழா வாழ்த்தும் ஆசிரிய சமூக சேவைகளை பாராட்டுதலும்





(துன்னாலை மத்தி, கோவிற்கடவை)

உயர்திரு. சங்கரப்பிள்ளை உருத்திரகுமார்

ஆசிரியர் பிரதீபா பிரபா 2015

(B.Sc PGD.in Ed.MED)

### ஆசிரிய சேவைக்காலம்

11.01.1993 - 31.08.1996 யா/கப்புது ஏகாம்பர வித்தியாலயம்.
01.04.1996 - 19.05.2002 யா/வடமராட்சி மகளிர் கல்லூரி.
20.05.2002 - 19.10.2017 யா/நெல்லியடி மத்திய கல்லூரி.
20.10.2018 - 10.02.2023 யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

சமூக சேவைகள்

1. கோவிற்கடவை சித்தி விநாயகர் ஆலய நிர்வாக சபை உறுப்பினர் கணக்காய்வாளர் 1991–2017
2. கோவிற்கடவை சனசமூக நிலைய தலைவர் 2001–2010, 2013–2016, 2019–2021
3. கோவிற்கடவை சித்தி விநாயகர் முன்பள்ளி முகாமைத்துவக் குழு தலைவர் 2011–2022

கோவிற்கடவை சித்தி விநாயகப் பெருமானதும் ஐயப்ப சுவாமிகளினதும் திருவருளும் பெரும் கருணையும் கிடைக்க வாழ்த்துவதோடு ஓய்வுக் காலத்தில் தொடர்ந்து இறைபணியாற்ற நல்லாசிகளைக்கூறி வாழ்த்துகின்றோம். (C-5938)

வாழ்த்துவோர் :- கலாநிதி சிவஸ்ரீ நா.கலாதரக் குருக்கள் (PHD)
அகில இலங்கை சமாதான நீதவான், தர்மகர்த்தா கோயிற்கடவை ஐயப்பன் ஆலயம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துருக்கி - சிரியா நிலநடுக்கங்கள்;
# 20 ஆயிரத்தை கடந்த உயிரிழப்புகள்

(ஜெனிவா)

**நூற்றாண்டின் பேரழிவு என விபரிக்கப்படும் துருக்கி மற்றும் சிரியாவில் ஏற்பட்ட நிலநடுக் கங்களில் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாகவும் மீட்புப் பணிகள் இன்னமும் தொடருவதால் பேரழிவின் முழுஅளவு இன்னும் தெளிவாக இல்லை என்றும் ஐ.நா தெரிவித்துள்ளது.**

மீட்புப் பணியாளர்கள் இன்னும் இடிபாடுகளில் இருந்து தப்பியவர்களைத் தேடி வருகின்றனர், ஆனால் நிலநடுக்கம் ஏற்பட்டு 5 நாட்கள் கடந்துள்ளதால் அதன் நம்பிக்கை குறைந்து வருகின்றது.

உறைபனி நிலைமைகள் ஆயிரக்கணக்கான உயிர் பிழைத்தவர்களின் வாழ்க்கையை அச்சுறுத்துகின்றன. அவர்கள் இப்போது தங்குமிடம், தண்ணீர் மற்றும் உணவு இல்லாமல் உள்ளனர்.

இதனிடையே, அடிப்படைக் கட்டமைப்புகளை மீண்டும் கட்டியெழுப்புவதற்கும் நிலநடுக் கங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவளிப்பதற்கும் உடனடி நிதியுதவி அடங்கலாக உலக வங்கி, துருக்கிக்கு 1.78 பில்லியன் டொலர்கள் உதவியை வழங்கியுள்ளது.



ஆனால், 100,000 அல்லது அதற்கு மேற்பட்ட மீட்புப் பணியாளர்களின் முயற்சிகள் வாகனப் பற்றாக்குறை மற்றும் பாழடைந்த வீதிகள் உள்ளிட்ட பல தளபாடத் தடைகளால் தடைப்பட்டு வருகின்றன. (நி)

## தபால் மூலம் வாக்களிக்க 6 இலட்சத்து 76 ஆயிரம் பேர் தகுதி

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்க ஆறு இலட்சத்து 76 ஆயிரத்து 873 பேர் தகுதி பெற்றுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதில் குருநாகல் மாவட்டத்தில் அதிகளவாக 75 ஆயிரத்து 579 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் குறைந்தளவான தபால் மூல வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த எண்ணிக்கை மூவாயிரத்து 187 எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தபால் மூலம் வாக்களிப்பதற்காக விண்ணப்பித்த 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரச ஊழியர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார். உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு எதிர்வரும் 22, 23 மற்றும் 24 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. (நி)

## மனித பாவனைக்கு தகுதியற்ற தே.எண்ணெய் இறக்குமதி

### தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கம்


(கொழும்பு)

வெளிநாடுகளால் நிராகரிக்கப்பட்ட மனித பாவனைக்கு தகுதியற்ற கழிவுகளுடன் கூடிய அதிகளவிலான தேங்காய் எண்ணெய் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதாக தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் குறித்த சங்கத்தின் தலைவர் புத்திக டி சில்வா தெரிவிக்கையில், கடத்தல் காரர்களிடம் இருந்து பணத்தை பெற்றுக்கொண்ட அதிகாரிகள் இதை கருத்திற்கொள்ளாது செயற்படுவதாக தெரிவித்துள்ளார். அத்துடன் இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெய் இந்தியா மற்றும் பிற அண்டை நாடுகளில் இருந்து மிகக் குறைந்த விலையில் இறக்குமதி செய்யப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

## காணி, பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்க விடமாட்டோம்

### அத்துரலிய ரத்ன தேரர்



(கொழும்பு)

பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்க இடமளிக்கப் போவதில்லை என பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளராகி வெற்றிபெறுவதை இலக்காகக் கொண்டே வடக்கு, கிழக்கில் காணி, பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் ஜனாதிபதி கருத்துக்களை கூறுகின்றார்.

ஆனால் எந்த வகையிலும் அவ்வாறான அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்குவதற்கு தாம் இடமளிக்கப்போவதில்லை என பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன குறிப்பிட்டுள்ளார். (நி)

## இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்குள்ளான உள்ளூராட்சி சபை தலைவர்களை இடைநிறுத்த புதிய சட்டம்

(கொழும்பு)

இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான உள்ளூராட்சி சபைகளின் தலைவர்களின் பதவிகளை இடைநிறுத்துவதற்கு புதிய சட்ட ஏற்பாடுகளை கொண்டுவர அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான சட்ட ஏற்பாடுகள் விரைவில் பாராளுமன்றத்திற்கு கொண்டு வரப்படும் என உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கம்புர தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள சட்டத்தின் கீழ் இலஞ்ச குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டாலும், அது நிரூபிக்கப்படும்வரை மேயர்கள் மற்றும் உள்ளூராட்சி சபை தலைவர்கள் பதவியில் இருக்க அனுமதிக்கப்படுவதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (நி)

## குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திற்கு மேலதிக பொலிஸ் பாதுகாப்பு

(கொழும்பு)

பத்தரமுல்லையில் அமைந்துள்ள குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் கடவுச்சீட்டு வழங்கும் நிலையத்திற்கு மேலதிக பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் ஜெனரல் ஹர்ஷ இலுக்பிட்டிய விடுத்த கோரிக்கைக்கு அமையவே இவ்வாறு மேலதிக பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் கடவுச்சீட்டு வழங்கும் பிரிவில் பல்வேறு முறைகேடுகள் நடப்பதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ள நிலையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (நி)

## இலங்கையின் சில பகுதிகளில் நிலநடுக்கம்

(கொழும்பு)

புத்தல, வெல்லவாய மற்றும் ஹந்தபனகல பிரதேசங்களில் 3.0 ரிக்டர் அளவில் சிறிய நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

இது தொடர்பான தகவலினை தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ளது.

இதனால் எந்த ஆபத்தும் இல்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இது குறித்து மக்கள் அச்சமடையத் தேவையில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## பறவைக் காய்ச்சல் மனிதர்களுக்கும் பரவலாம்

### உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை

(ஜெனிவா)

பறவைக் காய்ச்சல் மனிதர்களைப் பாதிக்கும் வாய்ப்பு இருப்பதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மனிதர்களுக்கு தொற்றும் இந்த பறவைக் காய்ச்சல் தொடர்பில் கடுமையான எச்சரிக்கையை உலக சுகாதார அமைப்பு விடுத்துள்ளது.

பறவைகளில் இருந்து பாலூட்டும் விலங்குகளுக்கு தொற்று பரவியுள்ள நிலையிலேயே உலக சுகாதார அமைப்பு இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

இதுவரை பறவைக் காய்ச்சல் பறவைகளில் மட்டும் காணப்பட்டுள்ள நிலையில், தற்போது நீர்நாய்கள், நரிகள் மற்றும் மிங்க் ஆகியவற்றில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனால், மனிதர்களைப் பாதிக்கும் வாய்ப்பு இருப்பதாக கூறி, நடவடிக்கை எடுக்க உலக சுகாதார அமைப்பு உலக நாடுகளை வலியுறுத்தியுள்ளது.

பறவைக் காய்ச்சல் மனிதர்களுக்கு பரவும் வாய்ப்புகள் மிக மிக குறைவு என்றாலும் இந்த விவகாரத்தில் நாடுகள் மெத்தனமாக செயற்பட வேண்டாம் எனவும் உலக சுகாதார அமைப்பு கேட்டுக்கொண்டுள்ளது. (நி)

## கடன் வழங்கியவர்களின் உத்தரவாதம் அவசியம் மீண்டும் வலியுறுத்தியது சர்வதேச நாணய நிதியம்

(கொழும்பு)

இலங்கைக்கு நிதி உதவி வழங்குவதற்கு கடன் வழங்கியவர்களின் உத்தரவாதம் அவசியம் என சர்வதேச நாணய நிதியம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

கடன் நெருக்கடியில் சிக்குண்டுள்ள இலங்கைக்கான நிதி உதவிக்கான அங்கீகாரம் இலங்கைக்கு கடன் வழங்கிய நாடுகளின் உத்தரவாதத்திலேயே தங்கியுள்ளது என சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சாளர் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

நிதி உத்தரவாதங்களை பெறுவதற்காக இலங்கை தொடர்ந்தும் இரு தரப்பு கடன்கொடுப்பனவாளர்களுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளதுடன் உள்ளூர் சீர்திருத்தங்களை முன்னெடுத்து... சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

போதிய உத்தரவாதங்கள் கிடைத்ததும் ஏனைய தேவைகள் பூர்த்தியானதும் சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபை கடன் உதவி தொடர்பான ஏற்பாடுகளை இலங்கைக்கு சமர்ப்பிக்கும் எனவும் சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெஸ்ட் கிரிக்கெட்டில் அஸ்வின் புதிய சாதனை



நடைபெற்றுவரும் இந்தியா-அவுஸ்திரேலியா டெஸ்ட் போட்டி மூலம் டெஸ்ட் கிரிக்கெட்டில் 3000 ஓட்டங்கள் 450 விக்கெட்டுகளை எடுத்த முதல் இந்தியர், முதல் ஆசிய வீரர் என்கிற சாதனையை அஸ்வின் படைத்துள்ளார்.

உலக அளவில் விரைவாக 450 விக்கெட்டுகள் எடுத்த வீரர்கள் வரிசையில், இலங்கை வீரர் முத்தையா முரளிதரன் முதலிடத்தில் உள்ளார். அவர் 80 போட்டிகளில் 450 விக்கெட்டுகள் வீழ்த்தி இருந்த நிலையில், அஸ்வின் 89 போட்டிகளில் 450 விக்கெட்டுகளை வீழ்த்தி இரண்டாவது இடத்தில் உள்ளார்.

இந்திய அளவில் முன்னாள் வீரர் அனில் கும்ளே 619 விக்கெட்டுகளை வீழ்த்தி அதிக விக்கெட்டுகள் எடுத்தவர்கள் பட்டியலில் முதல் இடத்தில் உள்ளார். இருப்பினும் அவர் 93 போட்டிகளில் 450 விக்கெட்டுகளை எடுத்த நிலையில், அஸ்வின் இந்த சாதனையை 89 போட்டிகளிலேயே எடுத்து அசத்தியுள்ளார். (4)

# துடுப்பாட்ட போட்டி

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நாளை 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கமுற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் வடமாகாணம் மற்றும் வடமத்திய மாகாண 19 வயதிற்கு உட்பட்ட தெரிவு அணிகளுக்கான (இருபது-20 கடினபந்து) துடுப்பாட்ட போட்டி நடைபெறவுள்ளது. ஆர்வலர்கள் எவ்வித கட்டணமுமின்றி போட்டியைப் பார்வையிடலாம் என வடமாகாண விளையாட்டுத் திணைக்கள பணிப்பாளர் பா.முகுந்தன் அறிவித்துள்ளார். (4-6)

# கிளப் போட்டி வரலாற்றில் ரொனால்டோ 500 கோல்கள்



பிரபல கால்பந்து வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ தனது கிளப் ஆட்ட வரலாற்றில் 500 ஆவது கோலை அல் நாசர் அணிக்காக அடித்துள்ளார்.

மான்செஸ்டர் அணியுடனான ஒப்பந்தத்தில் இருந்து விலகிக் கொண்ட போர்த்துக்கல் அணியின் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ, தற்போது 173 மில்லியன் மதிப்புள்ள புதிய ஒப்பந்தத்தின் அடிப்படையில் சவுதி அரேபியாவின் அல் நாசர் கிளப்பிற்காக விளையாடி வருகிறார்.

அல் நாசர் அணிக்காக களமிறங்கிய ரொனால்டோ முதல் இரண்டு போட்டிகளில் சிறப்பான ஆட்டம் எதுவும் வெளிக்காட்டவில்லை. இதையடுத்து கடந்த 3 ஆம் திகதி நடந்த பாடெஹ் அணிக்கு எதிரான போட்டியில் பெனால்டி வாய்ப்பை பயன்படுத்தி ரொனால்டோ அல் நாசர் அணிக்காக முதல் கோலை அடித்தார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் வியாழன் அன்று அல்-வெஹ்தாவுக்கு எதிரான சவுதி ப்ரோ லீக் கால்பந்து போட்டியில் அல் நாசர் அணிக்காக களமிறங்கிய ரொனால்டோ ஆட்டத்தின் 21 ஆவது நிமிடத்தில் கோல் அடித்து அசத்தினார்.


இந்தக் கோல் மூலம் போர்த்துக்கல் வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ தனது கிளப் கால்பந்து வாழ்க்கையில் 500 ஆவது கோல் அடித்த வீரர் என்ற சாதனையைப் படைத்தார்.

மேலும் இந்தப் போட்டியின் இரண்டாவது பாதியின் எட்டு நிமிடங்களில் பெனால்டி ஸ்பாட் மூலம் இரண்டாவது (501) கோலையும் ஆட்டத்தின் 61 ஆவது நிமிடத்தில்மூன்றாவது (502) ஆவது கோலையும் அடித்து கிறிஸ்டியானோ ரொனால்டோ ஹாட்ரிக் சாதனைகளைப் படைத்தார்.

அத்துடன் இந்தப் போட்டியில் ரொனால்டோ தனது 500, 501, 502 மற்றும் 503 ஆகிய நான்கு கோல்களை அடித்து அசத்தி அல் நாசர் அணியை 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றி அடைய வைத்தார். ரொனால்டோ இதுவரை ரியல் மாட்ரிட் அணிக்காக 311 கோல்களும் மான்செஸ்டர் யுனைடெட் அணிக்காக 103 கோல்களும் ஜுவென்டஸ் அணிக்காக 81 கோல்களும் தற்போது அல் நாசர் அணிக்காக 5 கோல்களும் அடித்துள்ளார்.(4)





### நந்தனா




### கிருத்திகா





### கௌரிபாலன்





### தயாளன்




### கபிலா




### ருமேகிகா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்தினபுரி-பாலபத்தல வீதியில் விபத்து

## 20 பயணிகள் காயம்

(இரத்தினபுரி)

இரத்தினபுரி - பாரபத்தல வீதியில் இந்துவ - மஹவாங்கு வாவிற்கு அருகில் பேருந்து ஒன்று விபத்துக்குள்ளானதில் 20 பயணிகள் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி)

# நல்லூர் பிரதேச சபை கொக்குவில் உப அலுவலகம் ஆதனப் பெயர்மாற்றம்

ஆதன இல: 71/5, 71/6 சம்பியன் லேன் வட்டாரம் 02. இவ்வாதனம் நல்லூர் பிரதேச சபை கொக்குவில் உப அலுவலக ஆதனப் பதிவேட்டில் சொந்தக்காரர் என்ற பெயரில் காணப்படுகிறது. குறித்த விபரங்களடங்கிய ஆதனத்திற்கு திரு.பத்மநேசன் முகுந்தன் என்ப்வர் தனது பெயருக்கு ஆதனப் பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார்.

குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிசு தி.கணதீபன் அவர்கள் முகதாவில் இல 2305 இல் 22.10.2022 திகதியில் நிறைவேறிய அறுதி உறுதியின்படியும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் திரு B.பிரணவன் அவர்களினால் அளந்து வரையுப்பட்ட 1232 ஆம் இலக்க 17.10.2022 ஆம் திகதிய படத்தின்படியும் **கூதி ஓடை நில.பர 03 குளி 5.11 இற்கு** சொந்தக்காரர் என தெரியப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் குறித்த ஆவணங்களில் பிரசித்த நொத்தாரிசு திரு.இராஜ்மோகன் பாலேந்திரா அவர்களினால் நிறைவேறிய 295 ஆம் இலக்க 14.03.2006 ஆம் திகதிய உறுதியும் **405** ஆம் இலக்க 14.05.2008 ஆம் திகதியன்று நிறைவேறிய உறுதிகள் வெளிப்படுத்தல் சாதனமாக காணப்படுவதாலும் குறித்த ஆதனப் பெயர்மாற்று நடவடிக்கையானது வெளிப்படைத்தன்மை கொண்ட செயற்பாடாகவும் காணப்படல் வேண்டும் என்பதற்காக யாழ்.குடாவிலிருந்து வெளிவரும் பத்திரிகைகளில் பிரசுரிக்கும் அவசியம் நல்லூர் பிரதேச சபைக்கு காணப்படுகின்றது. ஆதனங்களில் எல்லைகளாக கிழக்கு இரத்தினேஸ்வரியின் ஆதனம் எனவும் வடக்கு தணிகாசலம் நடேசனின் ஆதனம் எனவும் மேற்கு வேலாயுதம் கேதீஸ்வரனும் சம்பியன் 7 ஆம் ஒழுங்கை எனவும் தெற்கு சத்தியசீலனும் பெண் நகுலேஸ்வரியும் எனவும் காணப்படுகின்றது.

குறித்த ஆதனப் பெயர்மாற்றம் தொடர்பாக ஏதாவது முறைப்பாடுகள் அல்லது ஆட்சேபனைகள் காணப்படுமிடத்து சரியான ஆவணங்களுடன் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட ஒரு மாத காலத்திற்குள் தொலைபேசியூடாகவோ அல்லது நேரடியாகவோ அல்லது கடிதம் மூலமாகவோ தங்களது ஆட்சேபனைகளைத் தெரிவிக்கலாம். ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் சரியான ஆவணங்களுடன் சமர்ப்பிக்க வேண்டும். சரியான ஆவணங்கள் ஏதும் சமர்ப்பிக்காமல் தெரியப்படுத்தும் முறைப்பாடுகள் ஆட்சேபனைகள் யாவும் நிராகரிக்கும் உரிமை நல்லூர் பிரதேச சபைக்கு உண்டு என்பதனையும் குறித்த காலத்திற்குள் ஆட்சேபனைகள் கிடைக்காத சந்தர்ப்பத்தில் ஆதனப் பெயர்மாற்று விண்ணப்பதாரியான பத்மநேசன் முகுந்தன் என்பவருக்கு ஆதனப் பெயர்மாற்றம் மேற்கொள்ளப்படும் என்பதனையும் குறித்த ஆதனப் பெயர்மாற்றம் மேற்கொள்ளும் எந்தவித செயற்பாடுகளிற்கும் நல்லூர் பிரதேச சபை பொறுப்பேற்காது என்பதனையும் இத்தால் சகலருக்கும் அறியத் தருகின்றேன்.

**ப.மயூரன்**
**கௌரவ தவிசாளர்,**
**நல்லூர் பிரதேச சபை.**

(C-5937)

# கொள்கை விளக்கவுரை மீதான விவாதத்தை புறக்கணித்தது ஐக்கிய மக்கள் சக்தி

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கை விளக்க உரைமீதான விவாதத்தை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி புறக்கணித்துள்ளது.

9 ஆவது பாராளுமன்றத்தின் 4 ஆவது கூட்டத்தொடர் கடந்த புதன் கிழமை ஆரம்பமாகியது..

அரசாங்கத்தின் கொள்கைத் திட்டத்தை முன்வைத்து ஜனாதிபதி உரையாற்றினார். ஜனாதிபதியின் இந்த உரையை சஜித் அணி புறக்கணித்திருந்தது.

இந்நிலையில் கொள்கை விளக்க உரை மீதான சபை ஒத்திவைப்பு வேளை விவாதம் நேற்று முன்தினமும் நேற்றும் நடைபெற்றது. இச் சபை அமர்வுகளில் சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி பங்கேற்கவில்லை.

எனினும், ஜனாதிபதியின் உரையை எதிர்த்து சபையில் இருந்து வெளிநடப்பு செய்த சுதந்திர மக்கள் கூட்டணி, விவாதத்தில் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# 13 பற்றி தெளிவில்லாத தேரர்கள்-மனோ

(கொழும்பு)

"அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் தெளிவில்லாத காரணத்தாலேயே பௌத்த தேரர்கள் இன்று வீதிகளில் இறங்கியுள்ளனர்" என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது,


"அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிராகப் பௌத்த தேரர்கள் தற்போது வீதிகளில் இறங்கியுள்ளனர். உண்மையில் இந்தச் சட்டத்தில் உள்ள காணி, பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் தெளிவில்லாத காரணத்தாலேயே அவர்கள் அவ்வாறு செய்கின்றனர்.

நாடு அதளபாதாளத்தில் இருந்து மீண்டெழ வேண்டுமெனில் அதிகாரப் பகிர்வு மிகவும் அவசியமானது, தேவையானது. 13 ஆவது திருத்தச் சட்டம் என்பது புதியதொரு சட்டம் அல்ல. இதை ரணிலோ, சஜித்தோ, அநுரகுமாரவோ கொண்டு வரவில்லை.

இந்தச் சட்டம் ஏற்கனவே எமது பாராளுமன்றத்தின் அனுமதி பெறப்பட்டு நாட்டின் அரசமைப்பில் இருக்கின்ற சட்டமாகும். இது புதியதொரு சட்டம் அல்ல. எனவே, 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும்" என அவர் தெரிவித்தார். (நி)

என்றும் அழியா நினைவுகளுடன் வாழும் பாசமலர்களின்

# 13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



கலாபூஷணம்
செல்லையா மெற்றாஸ்மயில்

திதி.11.02.2023

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறைந்து பதின்மூன்று ஆண்டுகள்
ஆனாலும் எம் நினைவலைகளில்
நித்தம் வாழும் அன்புள்ளங்களே!
உங்கள் பிரிவை மாறாத வடுக்களாய்
மனதில் சுமந்து வாழ்கின்றோம்.

**அன்புச் சகோதரர்களின்**
**ஆத்ம சாந்திக்காக**
**இறைவனைப்**
**பிரார்த்திக்கின்றோம்.**
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



திருமதி.
உதயராணி கோபாலகிருஷ்ணன்

**18, மூத்த விநாயகர் வீதி,**
**நல்லூர்.**

**குடும்பத்தினர்**
**தொ.இ:- 021 222 3586**

(14560)

# இராசிபலன்

**11.02.2023**
**தை 28, சனிக்கிழமை**
**பஞ்சமி காலை 6.44 மணிவரை**

**சித்திரை முன்னிரவு 10.53 மணிவரை**
**சுபநேரம் -3.34-5.04 மணிவரை**
**இராகுகாலம்- 9.34-11.04 மணிவரை**

**சந்திராஷ்டமம் -**
**உத்திரட்டாதி, ரேவதி**

**வளவன்**

**மேஷம்**
நண்பர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விளங்குவர், வெளியூர்த்தொடர்புகள் அனுகூலம் தரும், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், வருமானம் திருப்தி தரும்.

**ரிஷபம்**
கொடுக்கல் -வாங்கல்கள் ஒழுங்காகும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், தொழில் நலன்கருதி எடுத்த முற்சிகள் கைகூடும், போசன சுகமுண்டு.

**மிதுனம்**
பாதியில் நின்ற பணிகளை மீதியும் தொடர்வீர்கள், நன்மைகள் நாடி வரும் நாள், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், தாழ்ந்த சுபாவமுண்டு.

**கடகம்**
தேவைகள் பூர்த்தியாகும் நாள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்,புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு.

**சிம்மம்**
ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், உறவு பகை பாராமல் உதவும் நாள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், போசன சுகமுண்டு.

**கன்னி**
வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், வாக்கு மேன்மையுண்டு, சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும்.

**துலாம்**
புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, ஆன்மிகச் சிந்தனை மேலோங்கும் நாள், மகிழ்ச்சி அதிகரித்து மன மாற்றம் காணும் நாள், உடல் நலனில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**விருச்சிகம்**
பயணங்களால் பிரபல மானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், சுபகாரிய பேச்சுக்களில் தாராளம் காட்டுவீர்கள், சயன சுகக் குறைவான நாள்.

**தனுசு**
தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மகரம்**
சான்றோர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், வருமானம் திருப்திகரமானதாக அமையும், செயற்பாட்டில் தீவிரம் காட்டுவீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கும்பம்**
நேற்றைய பணியொன்றை இன்றும் தொடரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பேச்சைக் குறைத்து செயலில் வேகம் காட்டுவீர்கள், வழிபாடு சிறப்பினைத் தரும்.

**மீனம்**
எதையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்து ஏற்பது நல்லது, குடும்பத்தில் சிறுசிறு முரண்பாடுகள் தோன்றி மறையும், காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள்.

**உடலுக்குத் தேகப் பயிற்சி போல மனதிற்குப் புத்தகங்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூ.100 இற்கு குறையாத வகையில் நெல் கொள்வனவு செய்யப்படும்

## போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகளிடம் வவு. அரச அதிபர் உறுதி

(குருமன்காடு)

**நெல்லிற்கான உத்தரவாத விலையை வழங்குமாறு கோரி வவுனியா, ஓமந்தை விவசாயிகள் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நேற்று முன்னெடுத்திருந்தனர்.**



வவுனியா, தாண்டிகுளம் விவசாய கல்லூரிக்கு முன்பாக ஆரம்பித்த ஆர்ப்பாட்டப் பேரணி யானது ஏ9 வீதி ஊடாக வவு னியா மாவட்ட செயலகம் வரை இடம்பெற்றது.

இதன்போது ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்ட விவ சாயிகள் "பயிர் அழிவிற்கான நஷ்ட ஈட்டினை வழங்கு, விவ சாயிகளின் நாளைய எதிர் காலத்திற்கு வழியை ஏற்படுத்து ங்கள், நெல்லிற்கான உத்தர வாத விலையை வழங்கு" என எழுதப்பட்ட பதாகைகளையும் தாங்கியவாறு ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொண்ட னர்.

மாவட்டச் செயலக வாயிலை அடைந்த விவசாயிகள் சார்பாக ஒரு குழுவினர் மாவட்ட அரசா ங்க அதிபர் பீ.ஏ.சரத்சந்திரவிடம் மகஜர் ஒன்றை கையளித்தது டன், தமது கோரிக்கை தொடர்பி லும் தெரியப்படுத்தினர்.

இதனையடுத்து மாவட்ட அரச அதிபர் பீ.ஏ.சரத்சந்திர இது குறித்து ஜனாதிபதியின் கவன த்திற்கு கொண்டு சென்றதாக வும் ஒரு கிலோவிற்கு 100 ரூபாய்க்கு குறையாத வகையில் உத்தரவாத விலையை அரசா ங்கம் உடனடியாக வர்த்தமானி மூலம் வெளியிடவுள்ளதாக தெரிவித்துள்ளதாகவும் அரசா ங்க அதிபர் விவசாயிகளிடம் இதன்போது உறுதியளித்துள் ளார். (4-6-250)

# இந்திய இணையமைச்சர் முருகன், பா.ஜ.க தமிழக தலைவர் அண்ணாமலை

## திருக்கேதீச்சரத்துக்கு விஜயம்





(மன்னார்)

இலங்கைக்கு விஜயம் மேற் கொண்டுள்ள இந்திய இணையமைச்சர் எல்.முரு கன் மற்றும் பா.ஜ.கவின் தமிழக தலைவர் கு.அண்ணா மலை ஆகியோர் நேற்று மன்னார் திருக்கேதீச்சர ஆலயத்திற்கு விஜயம் செய் தனர்.

இதன்போது யாழ்.இந்திய துணைத்தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெய பாஸ்கரனும் கலந்து கொண்டார்.

இதன் போது விசேட பூஜை வழிபாட்டில் ஈடுபட்ட தோடு, இந்திய அரசின் நிதி உதவியுடன் முன்னெடுக்கப் பட்ட ஆலய கட்டுமானப் பணி களை பார்வையிட்ட தோடு, ஆலய நிர்வாகத்தினருடன் கலந்துரையாடினார்.

அதனைத்தொடர்ந்து மன் னாரில் இடம்பெற்ற இல ங்கை - இந்தியா நட்புறவு நாடுகளின் தூதரக ஏற்பா ட்டில் மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப் பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்க ளுக்கான உலர் உணவுப் பொதிகளை வழங்கும் நிக ழ்வில் கலந்து கொண்ட னர். (4-6-285)

# இலவச கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சரும பராமரிப்பு சம்பந்த மான இலவசக் கருத்தரங்கு Oriflame நிறுவனத்தினால் நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் ரில்கோ ஹோட்டலில் காலை 9.30-1.30 வரை நடைபெறும்.

அத்துடன் சுயதொழில் வாய்ப்பை ஏற்படுத்தும் இலகுமுறை வழிகாட்டலும் வழங்கப்படும்.

பங்கு கொள்ளும் அனை வருக்கும் சர்வதேச அங் கீகாரமுடைய சான்றிதழ் வழங்கப்படும்.

மேலதிக தகவல்கள் மற்றும் பதிவுகளுக்கு 077 818 1099, 071 231 9502 எனும் தொலை பேசி இலக் கங்களுடன் தொடர்பு கொள் ளவும்.

### பரீட்சை வழிகாட்டல் வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தினால் 2023 ஆம் ஆண்டு நடத்தப்படவுள்ள சைவப் புலவர் மற்றும் இளஞ் சைவப்புலவர் பரீட்சைக்கு விண ணப்பித்தவர்களுக்கான இலவச பரீ ட்சை வழிகாட்டல் வகுப்புக்கள் இன்று காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் மகா வித்தியால யத்தில் சங்கத்தின் தலைவர் சி.கா.கமலநாதன் தலைமையில் ஆரம்பமாகவுள்ளது. இவ் வழிகாட் டல் வகுப்புக்கள் பிரதி சனி மற்றும் ஞாயிறு தினங்களில் காலை9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை இடம் பெறவுள்ளது.


அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்தும்

**யாழ்ப்பாணக் கம்பன் விழா- 2023**

(மூன்றாம் நாள் நிகழ்வுகள்–12.02.2023 ஞாயிறு)

காலை நிகழ்வுகள்

நேரம்
காலை 9.30 மணி

இடம்
நல்லை ஆதீன கலா மண்டபம்

மங்கல விளக்கேற்றல்
திருமதி.சரோஜினிதேவி இளங்கோவன்
(ஓய்வு நிலை நீதிபதி)

திருமதி.சுவர்ணா நவரட்ணம்
(நிறுவுநர், நவமங்கை நிவாசம்)

கடவுள் வாழ்த்து
திரு.ர.சுரசாகித்தியன்

தலைமையுரை
பேராசிரியர்.அ.சண்முகதாஸ்
(வாழ்நாள் பேராசிரியர்)

தொடக்கவுரை
பேராசிரியர் வ.மகேஸ்வரன்
(ஓய்வுநிலைப் பேராசிரியர்)

**விவாத அரங்கு**

நடுவர்
முனைவர் இரா.மாது

பொருள்:
'சூழ்நிலைக் கைதிகளாய் ஆகி சுயம் இழந்து நிற்கும் பாத்திரங்கள்...'

தசரதன் - பரா.ரமேஸ்
பரதன் - லோ.துஷிகரன்
கைகேயி - ம.கோசலை
வீடணன் - த.கருணாகரன்
கும்பகர்ணன் - தெ.ஹர்சன்
மாரீசன் - ந.ஐங்கரன்

மாலை நிகழ்வுகள்

நேரம்
மாலை 4.30 மணி

இடம்
நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணி மண்டபம்

மங்கல இசை
திரு.பி.எஸ்.பாலமுருகன்-திரு.பி.சாரங்கன் குழுவினர்

மங்கல விளக்கேற்றல்
வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி தம்பதியர்
(பணிப்பாளர், யாழ்.போதனா வைத்தியசாலை)
வைத்திய கலாநிதி கு.சுரேஷ்குமார் தம்பதியர்
(வைத்திய நிபுணர், பெண் நோயியல்)

கடவுள் வாழ்த்து
திரு. ம.தயாபரன்

தலைமையுரை
சி.தவராசா
(முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர், வடமாகாண சபை)

தொடக்கவுரை
எம்.ஏ.சுமந்திரன்
(பாராளுமன்ற உறுப்பினர்)

**வழக்காடு மன்றம்**

நடுவர் ஆயம்
கம்பவாரிதி இ.ஜெயராஜ்
பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா
கலாநிதி ஆறு.திருமுருகன்

பொருள்
'சூழ்ச்சியால் அறம் மீறி சூழ்நிலை மாற்றம் செய்தது குற்றம்!'

குற்றவாளியாக கைகேயி
தொடுப்பவர் ந.விஜயசுந்தரம் — மறுப்பவர் ச.லலீசன்

குற்றவாளியாக அனுமன்
தொடுப்பவர் இரா.மாது — மறுப்பவர் இரா.செல்வவடிவேல்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கக் கோரி
# ராகலையில் போராட்டம்



(ராகலை)

அத்தியாவசியப் பொருட்களின் விலையைக் குறைக்குமாறு கோரியும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குமாறு வலியுறுத்தியும் ராகலை நகரில் நேற்று முன்தினம் போராட்டமொன்று முன்னெடுக்கப் பட்டுள்ளது. தொழிற்சங்க மற்றும் வெகுஜன அமைப்புகளின் கூட்டணியால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இப்போராட்டத்துக்கு மக்களும் ஆதரவு வழங்கினர்.

கறுப்புக் கொடிகளை ஏந்தி, பதாகைகளையும் தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அரசின் நியாயமற்ற வரிவிதிப்பு கொள்கைக்கும் எதிர்ப்பை வெளியிட்டனர்.

"அரசு அநாவசியமான செலவுகளை குறைக்க வேண்டும், அடக்குமுறைகளை நிறுத்த வேண்டும்." எனவும் போராட்டக்காரர்கள் குறிப்பிட்டனர். (நி)

# பாகிஸ்தான் கூட்டுப் படைகளின்
## பிரதம அதிகாரி ஜனாதிபதியை சந்தித்தார்



(கொழும்பு)

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள பாகிஸ்தான் கூட்டுப்படைகளின் பிரதம அதி காரி ஜெனரல் சாஹிர் ஷம்ஷாத் மிர்ஸா நேற்று வெள்ளிக்கி ழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினை ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்தார்.

நட்பு நாடுகள் என்ற வகையில் இலங்கைக்கும் பாகிஸ்தா னுக்கும் இடையிலுள்ள நீண்ட கால நெருங்கிய உறவை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, ஜெனரல் சாஹிர் ஷம்ஷாத் மிர்ஸா உள்ளிட்ட குழுவினரு டன் சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்டார்.

இச்சந்திப்பைக் குறிக்கும் வகையில் ஜெனரல் சாஹிர் ஷம்ஷாத் மிர்ஸா, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு நினைவுப் பரிசொன்றையும் வழங்கினார்.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா மற்றும் பாகிஸ்தான் கடற்படையின் ரியர் அட்மிரல் அப்துல் பாஸித் பட் பிரதிநிதிகள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (நி)

# ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையை
# நிராகரிக்கின்றோம் - சுமந்திரன் எம்.பி



(கொழும்பு)

ஒற்றையாட்சிக்குள் அதியுச்ச அதிகாரப் பகிர்வு என்பதை ஏற்க முடியாது. அந்த ஒரு காரணத்துக்காகவே ஜனாதிபதியின் பாராளுமன்ற கொள்கை விளக்க உரையை நிராகரிக்கின்றோம் என யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் ஜனாதிபதியின் உரை மீதான விவாதம் ஆரம்பமானது.

இதில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது,

"ஜனாதிபதி தனது உரையில் ஒற்றையாட்சிக்குள் அதியுச்ச அதிகாரப் பகிர்வு என்று கூறினார். அப்படி ஒற்றையாட்சிக்குள் அதியுச்ச அதிகாரப் பகிர்வை மேற்கொள்ள முடியாது.

அது என்னவென்பது மற்றெல்லோரையும் விட ஜனாதிபதிக்கு மிக நன்றாகவே தெரியும். சமஷ்டி ஆட்சி முறை என்ற அடிப்படையில் ஜனாதிபதி பரப்புரை செய்திருக்கின்றார்.

நாங்கள் இந்த நாட்டைப் பிரிக்க வேண்டும் என்று கேட்கவில்லை. ஆனால், அதிகாரங்களை அர்த்தமுள்ள வகையில் பகிருங்கள். ஒற்றையாட்சி முறைக்குள் அதியுச்ச அதிகாரப் பகிர்வு நடக்க முடியாது.

பொலிஸ் அதிகாரத்தில் எவ்வித மாற்றமும் இல்லை. உள்ளவாறே இருக்கும் என ஜனாதிபதி குறிப்பிட்டதை அவர் மேலும் தெளிவுபடுத்த வேண்டும்.

பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளோம். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை காலம் காலமாக பிரதான பேசுபொருளாக காணப்படுகின்றது.

1996 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் சம்மேளன கூட்டத்தில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை இரத்து செய்யப்படும் என குறிப்பிடப்பட்டது.

நல்லாட்சி அரசில் பிரதமர் பதவி வகித்த தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசமைப்பு பேரவை கூட்டத்தில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை இரத்து செய்யப்படும் எனப் பலமுறை குறிப்பிட்டார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை இரத்துச் செய்யப்படும் என ஐக்கிய தேசியக் கட்சி வழங்கிய வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை.

கடந்த வருடம் அரசியல் நெருக்கடி தீவிரமடைந்தபோது அரசமைப்பின் 21 ஆவது திருத்தம் ஊடாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்படும். அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் ஜனநாயக இலட்சினங்கள் மீள அமுல்படுத்தப்படும் எனக் குறிப்பிடப்பட்டது.

அரசமைப்பின் 21 ஆவது திருத்தத்தில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகார தத்துவங்கள் மட்டுப்படுத்தப்படவில்லை. அதிகாரங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன என அவர் தெரிவித்தார். (நி)

# தடையில்லா மின்சாரம்
## வழங்கக் கோரிய மனு நிராகரிப்பு

(கொழும்பு)

உயர்தரப் பரீட்சை இடம்பெறும் காலப்பகுதியில் தடையில்லா மின்சாரத்தை வழங்குமாறு, இலங்கை மின்சார சபைக்கு உத்தரவொன்றை பிறப்பிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

குறித்த மனு நேற்று வெள்ளிக்கிழமை மேன்முறையீட்டு நீதிமன்றில் அழைக்கப்பட்டபோது இவ்வாறு நிராகரிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: ரேவதி 3
கி.பா: சூரி 8 செவ் 1 இல் உயரம்: 5' 6"
தகைமை/தொழில்:வைத்திய நிபுணர்
எதிர்பார்ப்பு: ஆங்கிலம் பேசத் தெரிந்த படித்த பெண் விவாகரத்தானவர் பிள்ளைகள் உண்டு
தொ.இ: B/13316

பிறப்பு:1984 இந்து
நட்சத்திரம்: மகம் 1
கி.பா: சூரி 8 செவ் 11 இல் உயரம் :5' 9"
தகைமை/தொழில்:A/Lகனடா PR இல்லை
எதிர்பார்ப்பு: கனடா PR உள்ளவர் விரும்பத்தக்கது விவாகரத்தானவர்
தொ.இ: B/13317

பிறப்பு:1987 இந்து
நட்சத்திரம்: கேட்டை 1
கி.பா:30½ சூரி 11 செவ் 12 இல்
உயரம்: 5' 8"
தகைமை/தொழில்:BSc Network Engineer (தனியார்)
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/13319

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: ரோகினி 4
கி.பா: சூரி 8 செவ் 5 இல்
உயரம்: 5' 6"
தகைமை/தொழில்:A/Lகாசாளர் (தனியார்)
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: B/13320

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: திருவோணம் 3
கி.பா :49 ½ சூரி 2 செவ் 5 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:BBM 3 ஆம் வருடம் முகாமைத்துவ உதவியாளர்
எதிர்பார்ப்பு: உயர்பதவி வங்கி விரும்பத்தக்கது
தொ.இ: G/13321

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம் 1
கி.பா: சூரி 7 செவ் 8 இல்
தகைமை/தொழில்: Bcom பட்டதாரி ஆசிரியர்
எதிர்பார்ப்பு: தகுந்த வரன்
தொ.இ: G/13328

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 3
கி.பா: 30 ¼ சூரி 7 செவ் 11 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: BFA நடன. உடற்பயிற்சி ஆசிரியர்
எதிர்பார்ப்பு: படித்த வரன்
தொ.இ: G/13330

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 4
கி.பா: சூரி .செவ் 4 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BSc. இயன் மருத்துவர் உதவி விரிவுரையாளர்
எதிர்பார்ப்பு: அரசதொழில் உள்நாடு மட்டும்
தொ.இ: G/13332

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 100





ஆம், அவரவர்கள் தங்கள் அலுவல்களைப் பார்த்துக் கொண்டு போவதற்குப் பதிலாக, ஏதோ ஊர்வலம் அல்லது பவனி பார்ப்பதற்காகக் காத்திருப்பவர்களைப் போல் நின்றார்கள். ஆண்கள், பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள் எல்லோருமே ஆவலுடன் நின்றார்கள்.

கோட்டை வாசலுக்கு முன்னால் சிறிது தூரம் வரை வெறுமையாகவே இருந்தது. வாசலண்டை காவலர்கள் மட்டும் நின்றார்கள். விடயம் என்னவென்று தெரிந்து கொள்ள வந்தியத்தேவன் ஆவல் கொண்டான். எல்லோரும் ஒதுங்கி நிற்கும் போது, தான் மட்டும் கோட்டை வாசல் காப்பாளரிடம் சென்று முட்டிக் கொள்ள அவன் விரும்பவில்லை. அதிலிருந்து வீண் வாதமும் சண்டையும் மூளலாம். இப்போது தனக்குக் காரியம் முக்கியமே தவிர வீரியம் பெரிது அல்ல; வீண் சண்டைகளில் இறங்க இது தருணமல்ல.

எனவே, வந்தியத்தேவன் கோட்டை வாசலைக் கவனிக்கக்கூடிய இடத்தில் வீதி ஓரத்தில் ஒதுங்கி நின்றான். பக்கத்தில் கம்மென்று மலரின் மணம் வீசியது. திரும்பிப் பார்த்தான் ஒரு வாலிபன், திருநீறு, ருத்திராட்சம் முதலிய சிவசின்னங்கள் தரித்தவன், இரண்டு கைகளிலும் இரண்டு பூக்கூடைகளுடன் நிற்பதைக் கண்டான்.

"தம்பி! எல்லோரும் எதற்க்க வீதி ஓரம் ஒதுங்கி நிற்கிறார்கள். ஏதாவது ஊர்வலம் கீர்வலம் வரப் போகிறதா?" என்று கேட்டான்.

"தாங்கள் இந்தப் பக்கத்து மனிதர் இல்லையா, ஐயா?"

"இல்லை, நான் தொண்டை நாட்டைச் சேர்ந்தவன்"

"அதனால்தான் கேட்கிறீர்கள் நீங்களும் குதிரை மேலிருந்து இறங்கிக் கீழே நிற்பது நல்லது."

வாலிபனோடு பேசுவதற்கு சௌகரியமாயிருக்கட்டும் என்று வந்தியத்தேவன் குதிரை மீதிருந்து குதித்தான்.

"தம்பி! எதற்காக என்னை இறங்கச் சொன்னாய்?" என்று கேட்டான்.

"இப்போது வேளக்காரப் படை அரசரைத் தரிசனம் செய்து விட்டுக் கோட்டைக்குள்ளிருந்து வரப் போகிறது அதற்காகத்தான் இத்தனை ஜனங்களும் ஒதுங்கி நிற்கிறார்கள்."

"வேடிக்கை பார்க்கத்தானே?"

"ஆமாம்."

"நான் குதிரை மேல் உட்கார்ந்து கொண்டு பார்த்தால் என்ன?"

"பார்க்கலாம் ஆனால் வேளக்காரப் படை வீரர்கள் உங்களைப் பார்த்து விட்டால் ஆபத்து".

"என்ன ஆபத்து? குதிரையைக் கொண்டு போய் விடுவார்களா?"

"குதிரையையும் கொண்டு போவார்கள் ஆட்களையே கொண்டு போய் விடுவார்கள் பொல்லாதவர்கள்."

"குதிரையையும் ஆளையும் கொண்டு போனால் சும்மா விட்டு விடுவார்களா?"

"விடாமல் என்ன செய்வது? வேளக்காரப் படையார் வைத்ததே இந்த நகரில் சட்டம். அவர்களைக் கேள்வி கேட்பார் கிடையாது. பழுவேட்டரையர்கள் கூட வேளக்காரப்படை விடயத்தில் தலையிடுவது கிடையாது."

இச்சமயத்தில் கோட்டைக்கு உட்புறத்தில் பெரிய ஆர்ப்பாட்ட ஆரவாரங்கள் கேட்டன. நகரா முழங்கும் சத்தம், பறைகள் கொட்டும் சத்தம், கொம்புகள் ஊதும் சத்தம் இவற்றுடன் பல நூறு மனிதர் குரல்களிலிருந்து எழுந்த வாழ்த்தொலிகளும் கலந்து எதிரொலி செய்தன.

வேளக்கார் வீரர் படைகளைப் பற்றி வந்தியத்தேவன் நன்கு அறிந்திருந்தான். பழந்தமிழ் நாட்டில், முக்கியமாகச் சோழ நாட்டில் இது முக்கிய ஸ்தாபனமாக இருந்து வந்தது. 'வேளக்காரர்' என்பவர் அவ்வப்போது அரசு புரிந்த மன்னர்களுக்கு மெய்க்காப்பாளர் போன்றவர்.

ஆனால் மற்ற சாதாரண மெய்க்காப்பாளருக்கும் இவர்களுக்கும் ஒரு வித்தியாசம் உண்டு.

(தொடரும்..)

# சிறுவர் அரங்கம்



## பரமார்த்த குரு கதைகள்

### வேதியர் சொன்ன ஆரூடம்

(நேற்றைய தொடர்ச்சி)

"இனி நான் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். முன்னெச்சரிக்கையிருந்தால் பிழைக்கலாம். இனி ஒரு போதும் கால் சுத்தி செய்யவே கூடாது. அதற்கு மேல் எல்லாவற்றிற்கும் ஆண்டவன் விட்ட வழி வேறு என்ன செய்ய முடியும்?" என்று புலம்பினார் குரு.

#### எதை எடுப்பது, எதை விடுப்பது?

வேதியரின் ஆருடத்தைக் கேட்டதற்குப் பிறகு பரமார்த்த குரு பரம ஜாக்கிரதையாக இருந்து வந்தார். அதற்கப்புறம்ம் அவர் பல ஆண்டுகள் உயிர் வாழ்ந்தார். என்றாலும் அந்த ஆசன சீதம் ஜீவன் நாசம்' வாசகத்தை மறக்கவே இல்லை.

இதற்கிடையே அவர்களுக்குப் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு விட்டது. வெளியே எங்காவது தேசாந்தரம் சென்று திரும்பினாலன்றி, பணத்துக்கு வழி ஏற்படாது போல் தெரிந்தது. எனவே குரு சிஷ்யர்களை அழைத்துக் கொண்டு தேசாந்தரம் புறப்பட்டார். பல ஊர்களுக்கும் போனால் அங்குள்ள அவரது பழைய சிஷ்யர்களும் பரிதாபப்படுபவர்களும் ஏதாவது பண உதவி செய்வது வழக்கம். ஆகவே, நம்பிக்கையோடு அவர்கள் பயணம் தொடங்கினார்கள்.

ஓரளவு வெற்றிகரமாகப் பயணத்தை முடித்து அவர்கள் மீண்டும் மடத்துக்குத் திரும்பி வரும்போது குருநாதர் மிகவும் சோர்வுற்றுப் போனார். குதிரை மீது சரியாக உட்கார முடியாமல் சாய்ந்தாடியபடி அமர சங்கடப்பட்டுக் கொண்டு வந்தார்.

அவர் தலைப் பாகையைத் தடுக்க, அது பின் பக்கமாகக் கீழே சரிந்து விழுந்து விட்டது. அதை சிஷ்யப் பிள்ளைகள் எடுத்துக் கொண்டு வருவார்கள் என்று அசட்டையாக இருந்து விட்டார். அவருக்கிருந்த களைப்பு அப்படி.

வெகுதூரம் சென்றதும் அவருக்குத் தலைப்பாகை நினைவு வந்தது. "எங்கே என் தலைப்பாகை? தாருங்கள்" என்று சிஷ்யர்களைக் கேட்டார்.

"அது எங்கே விழுந்ததோ அங்கே தான் கிடக்கும்" என்றார்கள் சிஷ்யர்கள். அவருக்குப் பொல்லாத கோபம் வந்து விட்டது. ஒரேயடியாக எரிந்து விழுந்தார்.

"என்ன நினைத்துக் கொண்டீர்கள்! கீழே விழுந்தால் அதை எடுத்து வைக்க வேண்டாமா? இதற்கெல்லாம் கூட நான் சொல்ல வேண்டுமா? உடனே ஓடிப் போய் தேடிக் கொண்டு வாருங்கள்!" என்றார்.

மடையன் தேடிக் கொண்டு ஓடினான். சிறிது நேரத்தில் தலைப்பாகையை எடுத்துக் கொண்டு திரும்பினான். வரும் வழியில் இளகியதாக பச்சைப்பசேலென்று ஏதோ ஒன்றைப் பார்த்து விட்டான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

முதலில் தூசியை கிளப்பி விடுகிறோம் பின்னால் பார்க்க முடியவில்லை என்று முறையிடுகிறோம்.
~ பிஷப் பார்க்கிலின்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## திறந்த வெளியரங்கில் இருந்த நடராஜர் சிலை மீண்டு(ம்) வருமா?

இந்திய மத்திய அரசினால் யாழ்ப்பாண மக்களுக்காக அமைக்கப்பட்ட யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையம் இன்று உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்படவுள்ளது.

ஏலவே திறந்து வைக்கப்பட்ட கலாசார மத்திய நிலையத்தை உத்தியோகபூர்வமாகக் கையளிக்கும் நிகழ்வில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளார்.

அதேநேரம் பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழகத் தலைவர் அண்ணாமலை மற்றும் மத்திய கடற்றொழில் இணை அமைச்சர் முருகன் ஆகியோரும் யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ளனர்.

கலாசார மத்திய நிலையத்தின் கையளிப்பு நிகழ்வு நடைபெறுவது வரவேற்புக்குரியது.

ஆயினும் கலாசார மத்திய நிலையம் அமைந்திருக்கின்ற நிலம் ஏலவே யாழ்ப்பாண திறந்த வெளியரங்கு இருந்த இடம் என்பது யாவரும் அறிந்ததே.

யாழ்ப்பாணத் திறந்த வெளியரங்கு இயங்கிய காலத்தில், இசை மற்றும் கலைநிகழ்வுகள் என ஏகப்பட்ட நிகழ்ச்சிகள் நடந்தன.

அந்த திறந்தவெளியரங்கின் மேற்பகுதியில் அம்சமான நடராஜர் சிலை கம்பீரமாக எழுந்து நின்றது.

எனினும் இப்போது அந்த நடராஜர் சிலைக்கு என்ன நடந்தது என்பது தெரியாமல் உள்ளது.

புதிய கலாசார நிலையத்தை அமைக்கும் பொருட்டு, சிதலமடைந்திருந்த திறந்தவெளியரங்குக் கட்டடம் அகற்றப்பட்டது. அதன் போது அங்கிருந்த நடராஜர் சிலையை அப்புறப்படுத்தியது யார்? அது எங்ஙனம் அகற்றப்பட்டது என்ற கேள்விகள் யாழ்ப்பாண மக்கள் மத்தியில் எழுந்துகொண்டே இருக்கிறது.

ஆம், யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தை இந்திய மத்திய அரசு அமைத்தபோது, ஏலவே இருந்த நடராஜர் சிலையை, கலாசார மத்திய நிலையத்தின் நுழைவாயிலில் வைத்திருக்க வேண்டும்.

அல்லது புதிதாக அமைக்கப்பட்ட நடராஜர் சிலையை அங்கு நிர்மாணித்திருக்க வேண்டும்.

ஆனால் அது எதுவும் நடக்கவில்லை எனும்போது, நடராஜர் சிலை குறித்து பல்வேறு சந்தேகங்கள் எழுகின்றன.

ஆயினும் இதுவிடயத்தில் நம் சைவ சமய அமைப்புகள் மௌனம் சாதிப்பதுதான் ஏன்? என்று புரியவில்லை.

ஆனால் ஒன்றை மட்டும் சுறியாக வேண்டும்.

அதாவது ஏலவே இருந்த யாழ்ப்பாணத் திறந்தவெளியரங்கில் நடராஜர் சிலை தவிர்ந்த இதர சமயம் சார்ந்த அடையாளங்கள் இருந்திருக்குமாயின், அந்த அடையாளங்கள் நிச்சயம் புதிய கலாசார மண்டபத்தில் காட்சிப் படுத்தப்பட்டிருக்கும்.

என்ன செய்வது இருந்தது நடராஜர் சிலை என்பதால், அதனை அகற்றியுள்ளார்கள் என்பதுதான் நிதர்சனமான உண்மை.

# நோயை குணப்படுத்த வேண்டுமாயின் கசப்பான மருந்தை குடித்தாக வேண்டும்

## 13ஆவது திருத்தம் தொடர்பில் அமைச்சர் நிமல்சிறிபால டிசில்வா

(கொழும்பு)

அரசியலமைப்பின் 13ஆம் திருத்தத்தை முழுமையாக செயல்படுத்துவதாக தெரிவிக்காத யாரும் இல்லை. அதனால் 13ஆம் திருத்தம் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி தங்களின் நிலைப்பாட்டை பகிரங்கமாக அறிவிக்கவேண்டும்.

அத்துடன் நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதைத் தவிர வேறு வழியில்லை என அமைச்சர் நிமல் சிறிபால டிசில்வா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இரண்டாவது தினமாக இடம்பெற்ற ஜனாதிபதியின் அரச கொள்கை விளக்க உரை மீதான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

எமது நோயை குணப்படுத்திக்கொள்ள மிகவும் கசப்பான மருந்தை குடித்தே ஆகவேண்டும் என்றால் அதனை நாங்கள் குடிக்கத்தான் வேண்டும்.

அதனை நிராகரித்தால் நோயைக் குணப்படுத்த முடியாமல் போகும். அந்த நிலையே தற்போது எமது நாடு எதிர்கொண்டுள்ளது.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகாண சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை பெற்றே ஆகவேண்டும். அதற்காக அதன் நிபந்தனைகளை பின்பற்றியே ஆகவேண்டும். அதனை நிராகரித்துவிட்டு பொருளாதாரப் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது.

அத்துடன் யார் ஆட்சிக்கு வந்தாலும் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை பெற்றுக்கொள்ளாமல் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாது.

யார் ஆட்சிக்குவந்தாலும் சர்வதேச நாணய நிதியம் தனது கொள்கையை மாற்றிக்கொள்ளப் போவதில்லை. அதனால் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை பெற்றுக் கொள்ள அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கையை விமர்சிக்கும் எதிர்க்கட்சியினர், சர்வதேச நாணய நிதியத்துக்குச் செல்லாமல் பொருளாதார நெருக்கடிக்கு எவ்வாறு தீர்வுகாண்பது என்பதை தெரிவிக்க வேண்டும்.

அத்துடன் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை பெற்றுக்கொள்ளும் வகையில் எமது பொருளாதாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தவேண்டி இருக்கிறது. அதனால்தான் சில பிரபல்யமற்ற தீர்மானங்களை எடுக்க வேண்டி வருவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பொருளாதார மறுசீரமைப்பை விரைவாக மேற்கொள்ளாமல் பொருளாதார பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது. மேலும் காணிப்பிரச்சினை வடக்கில் மாத்திரம் அல்ல அனைத்து பிரதேசங்களிலும் காணப்படுகிறது. அதனால் காணிப் பிரச்சினைக்கு தீர்வுகாண ஆணைக்குழு அமைத்து நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார்.

எனவே நாடு எதிர்கொண்டுள்ள தற்போதைய பொருளாதார நெருக்கடியை நாங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். அரசியல் பேதங்களை மறந்து நாட்டை கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றுபட்டு செயற்படவேண்டும் என்றார். (ம-7)

### ஜப்பானிய நிறுவனங்களின்

## நம்பிக்கையை மீளப்பெற இலங்கை முயற்சிக்க வேண்டும்

### ஜப்பானிய தூதரகம்

(கொழும்பு)

ஜப்பானிய நிறுவனங்களின் நம்பிக்கையை மீளப் பெறுவதற்கான முயற்சிகளை இலங்கை மேற்கொள்ள வேண்டிய தன் அவசியம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பொருளாதார நடவடிக்கைகளுக்கு புத்துயிர் அளிப்பதற்காக இலங்கையில் உள்ள பிரச்சினைகள் மற்றும் தடைகளை தீர்த்து வைக்க வேண்டும் என்று கொழும்பில் உள்ள ஜப்பானிய தூதரகம் தெரிவித்துள்ளது.

சுதந்திரதின நிகழ்வில் கலந்து கொள்வதற்காக இலங்கை வந்திருந்த ஜப்பானிய வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் டேக்கி சன்சுகே, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியுடன் கலந்துரையாடிய போது இந்த கருத்தை வலியுறுத்தியதாக ஜப்பானிய தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

ஜப்பானின் நிதியுதவியுடன் கூடிய இலகு தொடரூந்து திட்டத்தை இலங்கை ஒருதலைப்பட்சமாக ரத்து செய்ததை ஜப்பானிய அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தநிலையில், கடந்த காலத்தில், கற்றுக்கொண்ட பாடங்களைக் கருத்தில் கொண்டு, சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்பட்ட பொருளாதார மற்றும் நிர்வாக சீர்திருத்தங்களை இலங்கை சீராக அமுல்படுத்தும் என்று தாம் நம்புவதாக ஜப்பானிய இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

### 13ஐ முன்னிலைப்படுத்தி

## இனவாதத்தை தோற்றுவிப்பது வெறுக்கத்தக்கது - டயனா

(கொழும்பு)

நாட்டில் சிங்கள-தமிழ் பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டுமாயின் ஆங்கில மொழியை அரச கரும மொழியாக அறிவிக்க வேண்டும்.

அப்போது எவரும் முரண்பட்டுக் கொள்ளமாட்டார்கள். விக்கினேஷ்வரன் சண்டித்தனத்தையும், விமல் வீரவன்ச இனவாதத்தையும் நிறுத்திக்கொள்ள வேண்டும் என சுற்றுலாத்துறை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் டயனா கமகே தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம் பெற்ற அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடன உரை மீதான இரண்டாம் நாள் சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முன்னிலைப்படுத்தி நாட்டில் இனவாத முரண்பாடுகளை தோற்றுவிப்பது வெறுக்கத்தக்கது.

13 அல்லது 13 பிளஸ் என்ற பிரச்சினைகள் எமது நாட்டுக்கு வேண்டாம். நாம் அனைவரும் இலங்கையர்களாக வாழ வேண்டும்.

விக்னேஸ்வரன் சண்டித்தன கதைகளை கைவிடல் வேண்டும். விமல் வீரவன்ச போன்றோர் இனவாதத்தை தூண்டுவதனை நிறுத்த வேண்டும்.

சண்டித்தனமான பேச்சுக்களினாலும், இனவாத செயற்பாடுகளினாலும் 30 வருட கால யுத்தம் தோற்றம் பெற்றது.

அதன் தாக்கமே இன்று பொருளாதார பாதிப்பாக உருவெடுத்துள்ளது. பொருளாதார தாக்கம் அனைத்து இன மக்களையும் ஆட்டிப் படைக்கிறது.

வடக்கில் அரச கரும மொழியாக தமிழ் மொழி அமுலாக்கப்படுவதாக விமல் வீரவன்ச கூறுகின்றார்.

இலங்கையில் சிங்கள - தமிழ் பிரச்சினைக்கு தீர்வு காண இருக்கும் ஒரே வழி அரச கரும மொழியாக ஆங்கில மொழியை அறிவிப்பதே.

அனைத்து நாடுகளிலும் அனைத்து இடங்களிலும் இன்று ஆங்கில மொழியே உள்ளது. எனவே இலங்கையின் அரச கரும மொழியாக ஆங்கில மொழியை அறிவிக்க வேண்டும் என்றார். (ம-7)

## மண்ணெண்ணெய் அருந்திய 2 வயது குழந்தை உயிரிழப்பு

(கொழும்பு)

இரண்டு வயது ஆண் குழந்தை ஒன்று மண்ணெண்ணெய் அருந்தி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

இந்தச் சம்பவம் நிட்டம்புவ பிரதேசத்திலுள்ள வீடொன்றில் நேற்று இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த குழந்தை வீட்டில் வைக்கப்பட்டிருந்த கொள்கலனில் இருந்த மண்ணெண்ணெய்யைக் குடித்தது என்று குழந்தையின் பெற்றோர் பொலிஸ் விசாரணையின் போது தெரிவித்தனர்.

மண்ணெண்ணெய் குடித்த குழந்தை வத்துப்பிட்டி வலஆதார வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட போதும் குழந்தையின் உயிரைக்காப்பாற்ற முடியவில்லை என்று வைத்தியசாலை வட்டாரம் தெரிவித்துள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிக்குகள் 13 ஐ எரிக்கவில்லை பௌத்தத்தையே எரித்துள்ளனர்

## அருட்தந்தை சக்திவேல்

(வவுனியா)

பிக்குகள் அரசியல் யாப்பின் 13 ஆம் திருத்தத்தை எரிக்கவில்லை. அவர்கள் எரித்தது பௌத்தத்தையே என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, பிக்குகள் பேரணி நடத்தி அரசியல் யாப்பின் 13 ஆம் திருத்தத்தை வீதியில் எரித்திருக்கின்றார்கள். அவர்கள் எரித்தது பௌத்தத்தையே. பிக்குகளின் அரசியலுக்கு பின்னால் உள்ள அரசியல் சக்தியே அதற்கு காரணமாகும்.

தமிழர்கள் பௌத்தத்தை மதிக்கின்றார்கள். "அனைத்து உயிர்களும் துக்கமற்று இருப்பதாக. அனைத்து உயிர்களும் நலமாய் இருப்பதாக, அனைத்து உயிர்களும் நோயற்று இருப்பதாக" என்பதே பௌத்த கோட்பாடு.

ஆனால் ஒரு சில பிக்குகளின் அரசியல் அதுவல்ல. பிக்குகளின் அரசியல் என்பது கொலையும் செய்யும் என்பதற்கு எஸ்.டபிள்யு.பண்டார நாயக்கவின் கொலை நல்ல உதாரணம்.

இதே போல் அது தீயோடும் விளையாடும் என்பதற்கு இறுதி உதாரணமே 13 ஐதீயிட்டு கொளுத்தியமை எனத் தெரிவித்தார். (4-6-299)

# வெற்றிலை வாணிபத்தில் திருட்டு பொலிஸில் முறைப்பாடு

(தருமபுரம்)

கிளிநொச்சி முரசுமோட்டை பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட தருமபுரம் பொதுச் சந்தைப் பகுதியில் அமைந்துள்ள வெற்றிலை வாணிபம் ஒன்றில் நேற்று அதிகாலை மூன்று இலட்சத்திற்கும் அதிகமான பொருட்கள் களவாடப்பட்டுள்ளன.

இது தொடர்பாக கடை உரிமையாளர் தெரிவிக்கையில் நேற்று அதிகாலை 5 மணியளவில் வழமை போன்று கடையினை திறப்பதற்காக வந்த வேளை கடையின் முற்றத்தில் நின்ற இருவர் தன்னைக் கண்டவுடன் அப்பகுதியிலிருந்து சென்றுள்ளனர்.

பின்னர் கடையினை திறக்க முற்பட்ட பொழுது கடையின் பூட்டு உடைக்கப்பட்டிருந்தது.

கடையினை திறந்து பார்த்த பொழுது அங்கு பெறுமதியான வானொலிப்பெட்டி ஒன்றும் இரண்டு லட்சத்துக்கு அதிகமான விலையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த புகையிலை, வெற்றிலை மற்றும் பீடி போன்ற பொருட்கள் களவாடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பாக தருமபுர பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். (4-6-316)

# முல்லை பழம்பாசி கிராமத்தில் யானைத் தொல்லை அதிகரிப்பு

(அக்கராயன்)

முல்லைத்தீவு பழம்பாசி கிரா மத்தில் யானைகளினால் விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக பழம்பாசி கமக்கார அமைப்பின் தலைவர் க.நிசாந்தன் தெரிவித்தார்.

374 குடும்பங்கள் வாழ்கின்ற இக்கிராமத்தில் விவசாயமே முக்கிய தொழிலாக காணப்படுகின்றது. யானைகளினால் தமது விவசாயம் பாதிக்கப்படுவதாக கிராம உத்தியோகத்தர்மூலம் பிரதேச செயலாளருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

யானைகளைக் கட்டுப்படுத்துவதன் மூலமே பழம் பாசியில் விவசாய நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக கிராமங்களிலேயே கூடுதலான யானைகளின் தொல்லை காண ப்படுகின்றது. பயிர்ச்செய்கை தொடங்கியதில் இருந்து முடியும் வரை யானைக்காக காவல் இருக்க வேண்டி உள்ளதாகவும் சில வேளைகளில் யானை வெடிகள் பயன்படுத்தப்படுகின்ற போதும் யானைகள், யானை வெடிகளுக்கு அஞ்சாமல் பயிர் அழிவுகளை ஏற்படுத்தி வருவதாகவும் கமக்கார அமைப்பின் தலைவர் தெரிவித்தார். (4-6-350)

# முல்லை அம்பகாமம் வீதியை முழுமையாக புனரமையுங்கள்

## அப்பகுதி மக்கள் கோரிக்கை



(அக்கராயன்)

முல்லைத்தீவு அம்பகாமம் வீதியினை முழுமையாக புனரமைக்குமாறு அக்கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மாங்குளம் ஒட்டுசுட்டான் வீதியில் ஒலுமடுச் சந்தியில் இருந்து அம்பாமம் கிராமம் எட்டு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது. ஒலுமடுச் சந்தியில் இருந்து புளிமச்சிநாதகுளம் வரையான நான்கு கிலோ மீற்றர் வீதியே புனரமைக்கப்பட்டுள்ளது. மிகுதி நான்கு கிலோ மீற்றர் வீதி புனரமைக்கப்படாமலே உள்ளது. இதன் காரணமாக அம்பகாமம் கிராமத்தில் வாழ்கின்ற 67 குடும்பங்கள் சுயமாக போக்குவரத்து செய்வதிலும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

இக்கிராமத்திற்கான பேருந்து சேவை இடம்பெறுவதில்லை. இக்கிராமத்தில் இருந்து பதினைந்து கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள மாங்குளம் நகரத்தில் உள்ள மருத்துவமனை , பாடசாலை, வங்கிகள் என்பவற்றிற்கு செல்வதற்கு அம்பகாமம் வீதி புனரமைக்கப்படுவது அவசியமானதாகும்.

குறித்த வீதியினை புனரமைப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அம்பகாமம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-6-350)

# தேவை இருக்கும் வலயங்களிலிருந்து ஆசிரியர்களை இடமாற்ற வேண்டாம்

## உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம்

(யாழ்ப்பாணம்)

உடற்கல்வி ஆசிரியர்களுக்கான தேவை இருக்கும் வலயங்களில் இருந்து ஆசிரியர்களை இடமாற்றும் செய்வது மாணவர்களின் விளையாட்டு செயற்பாட்டிற்கு பாதகமான நிலையை ஏற்படுத்துவதுடன் வடமாகாண விளையாட்டு எழுச்சியை வீழ்ச்சிக்கு உட் படுத்தும் என உடற்கல்வி டிப் ளோமா ஆசிரிய சங்க தலைவர் ப.தர்ம குமாரன் தெரிவித்து ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேவை கருதிய சேவை இடமாற்றம் என்பது பொருத்தமான பாடசாலைக்கு ஆசிரியர் தேவை இருப்பின் அங்கு இடமாற்றம் பெறாத ஆசிரியர்களை இடமாற்ற கொள்கையின் அடிப்படையில் மாற்றம் வழங்குதல் ஆகும்.

ஆனால் வடமாகாணத்திற்குட்பட்ட சில வலயங்களில் உடற்கல்வி ஆசிரியர்களுக்கான வெற்றிடம் காணப்படுகின்ற அதேவேளை பல வலயங்களில் வெற்றிடமே இல்லை. இருந்தபோதும் மேலதிகமாக உடற்கல்வி ஆசிரியர்களை அனுப்பி தேவை உள்ள பாடசாலையை அவல நிலைக்கு தள்ளுகின்றனர்.

இன்றைய நிலையில் யாழ். வலயம் மற்றும் வலிகாம வலயங்களில் உள்ள 1 AB பாடசாலைகளில் இருந்து உடற்கல்வி ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்ட போதும் அந்த இடத்திற்கான உடற்கல்வி ஆசிரியர்கள் நிரப்பப்படவில்லை. இதனால் விளையாட்டுப் போட்டிகளை நடத்த முடியாது திண்டாடுகிறோம் என பாதிக்கப்பட்ட பாடசாலை அதிபர்கள் விசனமடைகின்றனர்.

இவ்வாறான செயற்பாட்டால் பாதிக்கப்படப்போவது மாணவர்களே. இதனை கருத்தில் கொண்டு வட மாகாணகல்விப் பணிப்பாளர் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். தேவை கருதிய சேவை இடமாற்றம் சிறந்த பொறிமுறையாக காணப்படுகின்ற போதும் அதனை கையாளுகின்ற தன்மை பொலிவிழந்தே காணப்படுகின்றது என சங்கத்தின் தலைவர் ப.தர்மகுமாரன் சுட்டிக்காட்டியுள்ளார். (4-6-299)

# குளவிக் கூட்டை அகற்றுமாறு கோரிக்கை

(தருமபுரம்)

கிளிநொச்சி விசுமடு சந்தையின் ஒரு பகுதியில் அமைந்துள்ள பனைமரம் ஒன்றில் ஒரு வருட காலமாக அகற்றப்படாத நிலையில் மக்களை அச்சமூட்டும் வகையில் உள்ள குளவிக் கூட்டினை அகற்றுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதனை அகற்றுமாறு பல அதிகாரிகளிடம் தெரியப்படுத்தியும் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

இதன் காரணமாக சந்தையின் உட்புற பகுதியில் தமது அன்றாட நடவடிக்கையை மேற்கொள்ளும் முதியவர்கள், சிறுவர்களுக்கு மிகவும் அச்ச நிலைமை தோன்றியுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

எனவே இது தொடர்பாக குடியிருப்பு பிரதேச சபையினர் இக்குளவி கூட்டினை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வியாபாரிகள், பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-6-316)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 180 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 140 | 160 | 140 | 160 |
| பச்சைமிளகாய் | 200 | 240 | 250 | 250 |
| தக்காளி | 300 | 280 | 300 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 180 | 200 |
| கோவா | 80 | 60 | 80 | 100 |
| கரட் | 150 | 240 | 200 | 200 |
| பூசணி | 80 | 80 | 80 | 100 |
| புடோல் | 150 | 220 | 160 | 120 |
| வாழைக்காய் | 200 | 180 | 120 | 200 |
| சின்ன வெங்காயம் | 350 | 400 | 400 | 360 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 180 | 160 |
| பாகற்காய் | 250 | 200 | 280 | 400 |
| வெண்டக்காய் | 250 | 300 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 90 | 100 | 120 |
| பயற்றங்காய் | 600 | 600 | 400 | 500 |
| லீக்ஸ் | 300 | 300 | 300 | 300 |
| பீற்றூட் | 100 | 150 | 150 | 150 |
| கறிமிளகாய் | 700 | 500 | 500 | 500 |
| முருங்கைக்காய் | 1800 | 1600 | 1200 | 1600 |
| போஞ்சி | 300 | 300 | 280 | 400 |
| கத்தரிதம்புள்ள | 160 | 100 | 150 | 160 |
| கீரை - 1 பிடி | 100 | 150 | 120 | 120 |
| தேசிக்காய் | 80 | 80 | 100 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 80 | 70-110 |
| இராசவள்ளி | 250 | 250 | 300 | 250 |
| வெங்காயப்பூ | 100 | 100 | 150 | 200 |
| முள்ளங்கி | 50 | 70 | 100 | 100 |
| பொன்னாங்காணி | 100 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 50 | 35 | 40 | 50 |
| ஈரப்பலா | 100 | 140 | 100 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பருத்தித்துறை...

மேற்கொண்ட இந்திய உயர்மட்டக் குழு நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் பருத்தித்துறை துறைமுகத்தினையும் பார்வையிட்டுச் சென்றுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கான விஜயத்தை மேற்கொண்ட அமைச்சர் எல்.முருகன் மற்றும் பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழ்நாடு மாநில தலைவர் அண்ணாமலை ஆகியோரைக் கொண்ட இந்திய உயர்மட்டக் குழு நேற்று முன்தினம் வியாழக்கிழமை யாழ்.சர்வதேச விமான நிலையம் ஊடாக யாழ்ப்பாணத்தை வந்தடைந்தது.

அவர்கள் நேற்று பிற்பகல் பருத்தித்துறை துறைமுகத்தினை சென்று பார்வையிட்டுள்ளனர். (ம-7,60)

## போராட்டம்...

நிலைய பொறுப்பதிகாரி முன்வைத்த விண்ணப்பத்துக்கு இந்தத் தடையுத் தரவு வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய கலாசார நிலையத்தில் இன்று நடைபெறும் சுதந்திர தின விழாவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்கேற்கிறார்.

இந்த நிகழ்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம் நடத்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அழைப்பு விடுத்திருந்தது.

இந்த நிலையில் இந்தப் போராட்டத்துக்கு தடையுத்தரவு கோரி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் விண்ணப்பம் செய்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன் மற்றும் சட்டத்தரணி க.சுகாஷ் உள்ளிட்ட 8 பேருக்கு எதிராக இந்தத் தடையுத்தரவு கோரப்பட்டது.

யாழ்ப்பாணம் நீதிமன்ற பதில் நீதிவான் பொலிஸாரின் விண்ணப்பத்தை ஏற்று தடைக்கட்டளையை வழங்கினார். (ம-7,33,104)

## தமிழ் மக்களின்...

திருமுருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீண்டகாலமாக தீர்க்கப்படாத தமிழர் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க இந்தியா துரிதமாகச் செயற்பட வேண்டும். இருநூறு வருடங்கள் இலங்கையின் பொருளாதாரத்துக்கு உழைத்த மலையக மக்களுக்கு ஒரு துண்டு காணியில்லை. அவர்கள் தற்போதும் அடிமை வாழ்க்கையையே வாழ்ந்து வருகின்றனர். அவர்களது வாழ்க்கைத்தரத்தை உயர்த்த இந்தியா உதவ வேண்டும்.

இந்துக்களின் புனித ஆலயமான திருக்கோணேச்சரம் இலங்கைக் கடற்படை, தொல்லியல் திணைக்களம் ஆகியவற்றின் கட்டுப்பாட்டின் கீழ் காணப்படுகிறது. நீண்டகாலமாக செய்யப்படாத திருக்கோணேச்சரத்தின் திருப்பணியை இந்தியா செய்ய வேண்டும். திருக்கோணேச்சர ஆலயம் அருகே பெட்டிக்கடை போட்டு நிரந்தரக் கட்டடம் அமைக்க முயற்சிக்கப்படுகிறது. இலங்கை ஜனாதிபதி, இந்தியப் பிரதமர் ஆகியோருக்கு கடிதம் அனுப்பியபோதும் நிரந்தரத் தீர்வு எட்டப்படவில்லை. இது தொடர்பாகவும் இந்தியா கரிசனை செலுத்த வேண்டும் என்றார். (ம-7,33)

## திட்டமிட்டவாறு...

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று வெள்ளிக்கிழமை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதாக தேர்தல் ஆணைக்குழு ஏற்கெனவே உறுதிமொழி அளித்துள்ள நிலையில், உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு அரசாணை பிறப்பிக்க வேண்டிய அவசியமில்லை என உயர் நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை தாமதிக்காது நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உத்தரவிடக் கோரி, ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் மனுவொன்றினை தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனு மீதான விசாரணையின் போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## சுதந்திர தின...

சுதந்திர தின விழா கொண்டாட்டம் இரண்டாவது தடவையாக தேவையில்லை எனக் கூறி கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றுக்கு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அனைத்துத் தரப்பினருக்கும் அழைப்பு விடுத்துள்ளது.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய கேட்போர் கூடத்தில் நேற்று பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் குறித்த அழைப்பை விடுத்துள்ளது.

இன்றைய தினம் கரிநாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டு யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்றலில் நண்பகல் 12 மணியளவில் பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள் என அனைவரையும் போராட்டத்தில் பங்கேற்குமாறு பல்கலைக்கழக மாணவர்களால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ம-7,33)

## யாழ் கலாசார...

நேற்று மாலை நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் விசேட அதிதியாகக் கலந்துகொண்ட அண்ணாமலை, அங்கு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையம் யாழ்ப்பாண மக்களுக்கே வழங்கப்படும்.

இதில் எந்த ஐயமும் இல்லை என்று தெரிவித்த அவர்; இன்று (நேற்று) தலைமன்னாருக்குச் சென்று யாழ்ப்பாணத்துக்கும் தமிழகத்துக்குமான கப்பல் போக்குவரத்தை ஆரம்பிப்பது தொடர்பில் ஆராய்ந்தோம் என்றும் தெரிவித்தார். (ம-7)

## யாழ்...

மணியளவில் இடம்பெறவுள்ளது. இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 75ஆவது சுதந்திர தினத்தை அனுஷ்டிக்கும் வகையில் யாழ்ப்பாண கலாசார நிலையத்தை கையளிக்கும் இந் நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமை வகிக்க பிரதமர் தினேஸ் குணவர்த்தன, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, இந்தியாவின் தகவல் - ஒலிபரப்பு, மீன்வளம், கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை இணையமைச்சர் கலாநிதி எல். முருகன், இலங்கையின் புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா உள்ளிட்டோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

"யாழ்ப்பாண கலாசார நிலையம்" யாழ்பாணம் மாநகர சபைக்குச் சொந்தமான இடத்தில் இந்திய அரசாங்கத்தின் முற்றும் முழுதுமான நிதிப் பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்டது. இதன் ஆரம்ப கட்டத்தில் இலங்கை - இந்திய அரசாங்கங்களுக்கிடையில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம், இதன் நிர்மாணப் பணிகளின் முடிவில் அதன் நிர்வாகத்துக்காக இலங்கை அரசாங்கத்தின் சார்பில் யாழ்ப்பாணம் மாநகர சபையிடம் கையளிக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. (ம-7)

### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி: 10/02/2023
சீட்டிழுப்பு இலக்கம்: 1482
வெற்றி இலக்கங்கள்: விருச்சிகம் 9 9 4 9 7 1
தேசிய லொத்தர் சபை

### தன நிதானய

திகதி: 2023.02.10
சீட்டிழுப்பு இலக்கம் - 1057
ஆங்கில எழுத்து: O
வெற்றி இலக்கங்கள்: 37 45 50 59

### கொவிசெத

திகதி: 2023.02.10
சீட்டிழுப்பு இலக்கம்: 3269
ஆங்கில எழுத்து: C
வெற்றி இலக்கங்கள்: 14 21 24 64
தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்

திகதி: 10/02/2023
சீட்டிழுப்பு இலக்கம்: 1375
வெற்றி எழுத்து: K
சுப்பர் இலக்கம்: 09
வெற்றி இலக்கங்கள்: 31 61 73 78

### HANDAHANA

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி: 2023.02.10
சீட்டிழுப்பு இலக்கம்: 336
வெற்றி இலக்கங்கள்: மேஷம் 11 49 50 53 மேஷம்
தேசிய லொத்தர் சபை

### மஹஜன சம்பத

திகதி: 2023/02/10
சீட்டிழுப்பு இலக்கம்: 5027
ஆங்கில எழுத்து: Q
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 6 3 5 7 6 7
தேசிய லொத்தர் சபை

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம்: 2002
நிறம்: இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2023.02.10
தினம்: வெள்ளிக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்: P 05 45 60 77
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை: ரூ. 3,713,080/-
DLB

### சனிதா

வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2023.02.10
சீட்டிழுப்பு இல: 4163
வர்ணம்: செம்மஞ்சள்
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை: ரூ. 5,056,060/-
வெற்றி இலக்கங்கள்: 05 24 25 56
ஆங்கில எழுத்து: C
DLB

### சசிரி

சீட்டிழுப்பு வாரம்: 286
சீட்டிழுப்பு திகதி: 2023.02.10
வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள்: 20 31 41
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,974,140/-
DLB

### ராசி

சுப்பர் ஜக்பொட்: ரூ. 2,412,840/-
திகதி: 2023-02-10
வெற்றி வாரம்: 3714
வர்ணம்: கரும் நீலம்
வெற்றி இலக்கங்கள்: 08 12 33 46
கடகம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை: ரூ. 10,622,660/-
DLB

### LUCKY Freedom

சீட்டிழுப்பு திகதி: 2023.02.10
தினம்: வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள்: 02 35 52
ஆங்கில எழுத்து: T
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை: ரூ. 40,721,250/-

### ஜய

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்: I 15 03 22 59 60
சீட்டிழுப்பு வாரம்: 1178
திகதி: 2023.02.10
வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 304,830,024.20
DLB

### அத கோடிபதி

வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1828
சீட்டிழுப்பு திகதி: 2023.02.10
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை: ரூ. 4,688,800/-
வெற்றி இலக்கங்கள்: 15 16 18 67
ஆங்கில எழுத்து: B
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலை கடற்பகுதியில்

# இந்திய செய்மதியின் உதிரிப்பாகங்கள்

(திருகோணமலை)

திருகோணமலை கடற் பகுதியில் இந்திய செய் மதியின் உதிரிப்பாகங் கள் உடைந்து வீழ்ந்துள் ளன.

மீனவர் ஒருவர் கடற் றொழில் திணைக்களத் திற்கு வழங்கிய தகவலுக் கமைய இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது.

இந்திய விண்வெளி ஆய்வுமையம் நேற்று போலா என்ற செய்மதியை விண்ணில் செலுத்தி யது.

அதன் உடைந்த உதி ரிப்பாகங்கள் இலங்கைக் கடற்பரப்பில் தரையிறங் கலாம் என இந்தியாவால் இலங்கை கடற்படைக்கு ஏற்கனவே அறிவிக்கப் பட்டிருந்ததாக தெரிவிக்கப் படுகின்றது.

அவ்வாறான உடைந்த பாகங்கள் சில திருகோண மலைக்கு அப்பால் உள்ள கடற்பிராந்தியத்தில் வீழ்ந் துள்ளதாக கடற்படை தெரி வித்துள்ளது. (ம-7)


**மெசின் கல்லு அடிக்க வேலையாள் தேவை**

சாவகச்சேரி நகரில் இயங்கிவரும் யாட் ஒன்றுக்கு மெசின் கொங்கிறீட் கல்லு அடிக்கும் வேலையாள் தேவை. தகுதியுடையோர் தொடர்பு கொள்ளவும்.

TP :-
**077 940 0963**
(C-5939)

**காணி விற்பனைக்கு**

சாவகச்சேரி, நுணாவில் (A9) கண்டி பிரதான வீதி முகப்பாக நிலப்பரப்பு 4 வணிக வளாகங்கள், ஹொட்டல்கள், அமைப்பதற்கும் சகல வியாபார தேவைகளுக்கும் ஏற்ற இடம்.

நல்ல தண்ணீர், நல்ல சூழல்.

- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
- தரகர் தேவையில்லை.

(14464)

தொடர்புகளுக்கு :- 076 690 6272

**பௌதிகவியல் (Physics)**

உயர்தர மாணவர்களிற்கான பௌதிகவியல் தனியாகவும் (Personal), குழுவாகவும் (Group) கற்பிக்கப்படும்.

தொடர்பு -
**076 157 0107**
(14554)

**IELTS - New Batch ஆரம்பம்**

Sp.Offer 10% Discount உடன்
Basic & Advance Grammar
Classes, First Class (Free of Charge)

இல.53, சிவகுருநாதர் வீதி,
Brown Rd - Jaffna.
077 798 9830 By:- B.MURALI

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக் கான Student Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். (14563)


# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
09.01.1945

விண்ணில்
15.01.2020

அமரர் **சுபத்திராதேவி தணிகாசலம்பிள்ளை**


**திதி - 11.02.2023 அபரபக்க சஷ்டி**

என்றென்றும் சுடர்விட்டு பிரகாசமாய் எரியும் பாசச்சுடர்
ஆசை அம்மா மூன்றாண்டு கடந்ததம்மா
உங்கள் பாசக் குரலை நாம் கேட்டு
ஆறாத்துயரில் ஏங்கித் தவிக்கின்றோம் தினமும்
ஆறுதல் கொள்கின்றோம் உங்கள்
நினைவுகளை சுமந்தபடி....

(14562)

நீங்கா நினைவுகளோடு -
கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# துயர்பகிர்தல்



அமரர்

## ஜோசப் அனோஜன்

(கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவன்
DHL WHARE HOUSE SUPERVISOR)

யாழ்ப்பாணம் ஓட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாக வும் கொண்ட ஜோசப் அனோஜன் அவர்கள் 05.02.2023 அன்று காலமானார். அவர்களுக்கு எங்கள் ஆழ்ந்த அனுதா பங்கள்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம் - பத்மாவதி மற்றும் காலஞ்சென்றவர்களான பற்றிக் - செபமாலை ஆகியோரின் அன்புப் பேரனும் ஜோசப் கௌசல்யா தம்பதியரின் அன்பு மகனும் டர்சிகா (மாணவி - பேராதனைப் பல்கலைக்கழகம் 3ஆம் வருடம்), சனூஜன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ரமேஸ் - தர்சினி, ராகவன் - ராகினி, ரஞ்சித் குமார் - பேபிரேக்கா (லண்டன்), ராஜேஸ்வரன் - குகந்தினி (பிரான்ஸ்), ரகுநாதன் ஆகியோரின் அன்பு மருமகனும், சரண்யா, லதீசன், சதுர்சிகா, டிலக்சிகா (லண்டன்), நந்தனா (லண்டன்), நேத்திரன் (லண்டன்), தக்சித் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மச்சானும் ஆவார்.

*அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக.*

பிறப்பு
23.07.2003

இறப்பு
05.02.2023

தகவல் :
**துயருடன் பாசமிகு மாமன்மார்கள்.**

(14034)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.02.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org